**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THIRUVIDAIMARUTHUR.**

Deposition of Witness for : PW-6 Date : 18.06.2024
Case No. : O.S.492/2019 Nationality : Indian
Name : விநாயகம் (முதுநிலை வருவாய் ஆய்வாளர்) Religion :
Age : 49
Father's/Husband's Name :
Village :
Taluk :

<u>வா.சா.6</u>

சாட்சி சத்திய பிரமாணம் செய்து விசாரிக்கபடுகிறார்.

**<u>முதல் விசாரணை :-</u>**

நான் தற்போது கும்பகோணம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் முதுநிலை வருவாய் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததின்பேரில் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் சா.சா.ஆ.8 அறிக்கையில் கண்ட கையொப்பம் என்னுடையதுதான். நான் 02.06.2023 ம் தேதி திருவிடைமருதூர் மண்டல துணை வட்டாட்சியராக பணிபுரிந்தபோது திருவிடைமருதூர் வட்டாட்சியருக்கு நான் மேற்படி அறிக்கை அளித்தேன்.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

எனக்கு நீதிமன்றத்தில் இருந்து சாட்சியம் அளிக்க அழைப்பாணை வந்ததா என்றால் வந்தது. தாவா சொத்து சாகுபடி சம்மந்தமாக நான் சான்று எதுவும் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. ரமேஷ் மற்றும் முகமது ஆரிப் ஆகியோருக்கிடையே சாகுபடி செய்வது சம்மந்தமாக ஏற்பட்ட சட்ட ஒழுங்கு பிரச்சனை குறித்து விசாரணை செய்து மேற்படி அறிக்கையை அளித்துள்ளேன் என்றால் சரிதான். நான் மேற்படி அறிக்கையில் கிராம

நிர்வாக அலுவலர் அளித்த வாக்குமூலத்தின் அடிப்படையில் அறிக்கை அளித்ததாக சொல்லியுள்ளேன் என்றால் நான் நேரடியாக விசாரணை செய்து கிராம நிர்வாக அலுவலர் அளித்த வாக்குமூலத்தையும் இணைத்து அனுப்பியுள்ளேன். எனது அறிக்கையினை பரிசீலனை செய்து மேற்படி சட்ட ஒழுங்கு பிரச்சனை குறித்து கும்பகோணம் வருவாய் கோட்டாட்சியரால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுவிட்டது என்றால் சரிதான்.

x

Taken down by Typed to my dictation
in Open Court read over to the witness
admitted and acknowledged by
him/her to be correct.

Sd/- N. Sivapalani,
District Munsif cum Judicial Magistrate,
Thiruvidaimarudur.